முதலில் எடுத்துக்கொண்டு, அதை ரத்து செய்துவிட்டு, வேறு 4 திட்டங்களை எடுத்துக் கொண்டிருப்பதைப் பற்றிக் கூறினார்கள். அந்த 4 திட்டங்களும் வேறு மாவட்டத்திற்குச் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இப்படிப்பட்ட திட்டங்களை செயல்படுத்துகின்ற நேரத்தில் குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கங்கே இருக்கின்ற நிலைமைக்கேற்ப எடுத்துச் சொல்கிறார். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து அரசுக்குக் கொடுக்கின்ற நேரத்தில், அவைகள் பரிசீலிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் ஒன்றியங்கள் எடுக்கப்படுகின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு அருமை அண்ணன் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் தன்னுடைய தொகுதியில் ஒன்றியத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முதல்வர் அவர்கள் மூலமாகக் கோரிக்கை வைத்தார். அவர்கள் ஒன்றியம்கூட......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பதில் சொல்லுங்கள். விளக்கம் வேண்டாம்.

திரு. எஸ். இளையபெருமாள் : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** தற்போது எனக்கும் மாண்புமிகு உறுப்பினருக்கும் இடையில் நடந்த விவாதங்கள் அவைக் குறிப்பில் இடம்பெறாது.

பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 10-00]

கோபி நகராட்சியில் வீடுகள் கட்ட வரைபட அங்கீகாரம்.

*வினா எண். 425—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கோபிச்செட்டிப்பாளையம் நகராட்சியில் ஒன்றரை சென்டிற்குக் கீழே கட்டப்பட்டுள்ள வீடுகளின் வரைபடம் அங்கீகரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 7]

(ஆ) ஆம் எனில், இதுவரையிலும் கட்டிமுடிக்கப்பட்டுள்ள வீடுகளின் வரைபடங்கள் அங்கீகரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள விதியின்படி, 95 சதுர மீட்டர் பரப்பளவுக்குக் குறையாமலும் ஆறு மீட்டர் அகலத்திற்குக் குறையாமலும் உள்ள மனைகளில் மட்டுமே வீடுகள் கட்ட அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே ஒன்றரை செண்ட் அளவுள்ள நிலங்களில் கட்டப்படும் வீடுகளுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எனினும் கட்டிட அனுமதியை மறுத்து நகராட்சி ஆணையாளர் அறிவிப்பு கொடுத்த 60 நாட்களுக்குள் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு உரிய மேல்முறையீடுகளை சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பினால் விதிகளைத் தளர்த்தி அனுமதி வழங்குவது தனித்தனியே பரிசீலிக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கோபி நகராட்சியில் ஒன்றரை சென்டிற்கு அளவுள்ள நிலங்களில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டுள்ளன? வரைபடம் அங்கீகரிக்கப்படாமல் உள்ள வீடுகள் எத்தனை? விதிகளைத் தளர்த்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை வீடுகள் மறுக்கப்பட்டுள்ளன, கட்டப்பட்டுள்ளன என்பதற்கான விவர அறிக்கை என்னிடத்தில் இல்லை. தற்போதுள்ள விதியின் கீழ், 95 சதுர மீட்டர் பரப்பளவுக்குக் குறையாமலும், ஆறு மீட்டர் அகலத்திற்குக் குறையாமலும் உள்ள மனைகளில் மட்டுமே வீடுகள் கட்ட அனுமதிக்கப்பட்டு வருகின்றன. $1\frac{1}{2}$ செண்டுக்குக் குறைவாக இருந்தால் அனுமதி கொடுப்பதற்கு அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவர் அவர்களே, $1\frac{1}{2}$ செண்டிற்கு உட்பட்ட இடங்களில் வீடுகள் கட்ட அனுமதி வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த கால நிலை நாட்களா, மாதங்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வெகு சீக்கிரத்தில் முடியும்.